# 1 கோடி பேருக்கு கண் நீர் அழுத்த பாதிப்பு: விழிப்புணர்வு இல்லாததே காரணம்

**சென்னை, மார்ச் 12:** இந்தியாவில் 1.12 கோடி பேர் கண் நீர் அழுத்த நோயால் (க்ளக்கோமா) பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். அவர்களில் 98% பேருக்கு அந்நோயின் தாக்கம் குறித்த விழிப்புணர்வு இல்லாமல் இருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதுகுறித்து சங்கர நேத்ராலயா மருத்துவமனையின் மருத்துவ சமூகவியலாளர் அ.போ.இருங்கோவேள் கூறியதாவது:

நிகழாண்டில் மார்ச் 12 முதல் 18-ஆம் தேதி வரை உலக கண் நீர் அழுத்த விழிப்புணர்வு வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது.

உலகம் முழுவதிலும் 6.62 கோடி பேரும், இந்தியாவில் மட்டும் 1.12 கோடி பேரும் அந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் 98 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் கண் நீர் அழுத்த நோயால் தாங்கள் பாதிக்கப்பட்டிருப்பது தெரியாமல் இருக்கின்றனர்.

விழியின் முன் பகுதியில் உள்ள அறையில் (ஏன்டீரியர் சேம்பர்) சுரக்கும் நீரின் அழுத்தம் (இன்ட்ரா ஆக்குலர் பிரஷர்) இயல்பு நிலைக்கு மாறாக அதிகரித்தால் அதுவே கண் நீர் அழுத்த நோய் எனப்படுகிறது. இதனை அலட்சியப்படுத்தினால் பார்வை நரம்புகள் பாதித்து, அதன் விளைவாக பார்வை இழப்பு ஏற்படக்கூடும்.

அதேவேளையில், ஆரம்ப நிலையிலேயே மருத்துவக் கண்காணிப்பு மற்றும் சிகிச்சைகளை மேற்கொண்டால் பார்வை இழப்பைத் தடுக்க முடியும். 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், கண் நீர் அழுத்த பாதிப்பு உள்ளவர்களின் குடும்பத்தினருக்கும், ஸ்டீராய்டு மருந்துகள் தொடர்ந்து உபயோகிப்பவர்களுக்கும் இந்த நோய் வர வாய்ப்புகள் அதிகம்.

நோயின் தன்மையைப் பொருத்து சொட்டு மருந்துகள், லேசர் சிகிச்சை அல்லது அறுவை சிகிச்சை மூலம் கண் நீர் அழுத்த பாதிப்பை குணப்படுத்தலாம்.

40 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஆண்டுக்கொரு முறை கட்டாய கண் பரிசோதனை செய்து கொள்வதும், அறிகுறிகள் இருப்பவர்கள் அதனை அலட்சியப்படுத்தாமல் உடனடியாக மருத்துவரை அணுகுவதும் கண் நீர் அழுத்த பாதிப்பை தடுப்பதற்கான பிரதான வழிமுறைகள் என்றார் அவர்.